# JSR IAS ACADEMY

# பொது அறிவியல்

# வேதியியல்

# உரங்கள், பூச்சிகொல்லிகள்

உயிரிப்பொருள்களின் அடிப்படையில் இயற்கை உரங்களைக் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**அ) மக்கிய உரம் மற்றும் மண்புழுத் தொழுஉரம்:**

- தாவர, விலங்குக் கழிவுகளை மண் புழுக்களைப் பயன்படுத்தி, சிதைத்துத் தயாரிக்கப்படும் உரம் மண்புழுத் தொழுஉரம் எனப்படும்.

**ஆ) பசுந்தாள் உரம்:**

- **சணல், கொழிஞ்சி போன்ற லெகுமினஸ் தாவரங்கள்** மூலம் பசுந்தாள் உரம் தயாரிக்கப்படுகிறது.
- பசுந்தாள் தாவரங்கள் மண்ணிற்குத் தேவையான சத்துக்களான **நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்றவற்றை மண்ணில் சேர்க்கின்றன.**

| செயற்கை உரங்களின் வகைகள் | எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| நைட்ரஜன் உரங்கள் | யூரியா, அம்மோனியம் சல்ஃபேட், அம்மோனியம் நைட்ரேட் போன்றவை. |
| பாஸ்பரஸ் உரங்கள் (கனிமச் சத்துக்கள்) | தனி சூப்பர் பாஸ்பேட், டிரிப்பிள் சூப்பர் பாஸ்பேட் (மும்மய சூப்பர் பாஸ்பேட்). |
| பொட்டாசிய உரங்கள்(சாம்பல் சத்துக்கள்) | பொட்டாசியம் நைட்ரேட், பொட்டாசியம் குளோரைடு. |
| கலப்பு உரங்கள் | நைட்ரோபாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், டை அம்மோனியம் பாஸ்பேட்(DAP). |

| இயற்கை உரங்கள் | செயற்கை உரங்கள் |
|---|---|
| 1. இயற்கை உரம் என்பது விலங்குக்கழிவு, மனிதக்கழிவு, தாவரக்கழிவின் சிதைவு போன்றவற்றால் தோன்றும் ஓர் இயற்கைப் பொருள். | 1. செயற்கை உரம் என்பது கந்தகம், பாஸ்பரஸ், நைட்ரஜன் போன்ற ஊட்டப்பொருள்கள் அடங்கிய ஒரு தாது அல்லது வேதிக்கூட்டுப்பொருள். |
| 2. இயற்கை உரங்கள் கரிமப்பொருள்கள் ஆகும். | 2. செயற்கை உரங்கள் கனிமப்பொருள்கள் ஆகும். |
| 3. இயற்கை உரங்கள் வயல்களில் தயாரிக்கப்படுகின்றன. | 3. செயற்கை உரங்கள் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. |
| 4. இயற்கை உரங்கள் எல்லா ஊட்டப் பொருள்களையும் குறைந்த அளவில் கொண்டுள்ளன. | 4. இவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட ஊட்டப்பொருள்களை மட்டும் அதிக அளவில் கொண்டுள்ளன. |
| 5. இயற்கை உரங்கள் மண்ணிற்கு அதிக அளவு மட்கினைச் சேர்த்து, மண்ணின் ஊட்டத் தன்மையை மேம்படுத்துகின்றன. | 5. செயற்கை உரங்கள் மண்ணிற்கு மட்கு சேர்ப்பதில்லை. |
| 6. இயற்கை உரங்கள் நீரில் குறைந்த அளவு கரையும் தன்மை உடையதால் எளிதில் உறிஞ்சப்படுவதில்லை. | 6. செயற்கை உரங்கள் நீரில் கரையும் தன்மை உடையதால் எளிதில் உறிஞ்சப்படுகின்றன. |
| 7. இயற்கை உரங்கள் குறைந்த அளவே நீரில் கரைகின்றன. இவை மண்ணிலிருந்து நீரால் எளிதில் அடித்துச்செல்லப்படுவதில்லை. எனவே, இவற்றின் பயன் நீண்ட நாள்களுக்கு நிலைத்திருக்கும். | 7. செயற்கை உரங்கள் எளிதில் நீரினால் அடித்துச் செல்லப்படும். மேலும், இவற்றின் விளைவு குறைந்த காலத்திற்கு மட்டுமே வரும். எனவே, இவற்றை மீண்டும் மீண்டும் பயன்படுத்த வேண்டியுள்ளது. |

**பூச்சித் தீங்குயிரிகள்**

பூச்சித்தீங்குயிரிகள் மூவகைப்படும்.

**i) மெல்லும் பூச்சிகள்:**

இவை தாவரங்களின் வேர், தண்டு, இலைகளைக் கடித்து மெல்லும் தன்மை கொண்டவை. எ.கா. வெட்டுக்கிளிகள், கம்பளிப் பூச்சிகள்.

**ii) உறிஞ்சும் பூச்சிகள் :**

இவை தாவரங்களின் பல்வேறு பாகங்களின் செல்சாற்றினை உறிஞ்சுகின்றன. எ.கா. இலைத்தத்துப் பூச்சிகள், அசுவனி(தாவரப்பேன்) போன்றவை.

**iii) துளைக்கும் பூச்சிகள்:**

இவை தாவரங்களின் பல்வேறு பாகங்களைத் துளைத்து, உள்ளே நுழைந்து தாவரத்திசுக்களை உணவாக எடுத்துக் கொள்கின்றன. எ.கா. கரும்புத் துளைப்பான்.

**பூச்சிக்கொல்லிகள்:**

பூச்சிகளைக் கொல்லப் பயன்படும் வேதிப்பொருள்கள் பூச்சிக்கொல்லிகள் எனப்படும்.

எ.கா. **D.D.T. (டைகுளோரோ டைபீனைல் ட்ரைகுளோரோ ஈத்தேன்), மாலத்தியான் குளோரினேற்றமடைந்த ஹைட்ரோகார்பன், கரிம பாஸ்பேட் மற்றும்**

**கார்பமேட்,எண்டோசல்பான், காம்மென்ஸேன்(அ) லிண்டேன் (அ) BHC (பென்சீன் ஹெக்சா குளோரைடு)**

- ❖ இந்தியாவின் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி - BHC

**பூஞ்சைக்கொல்லிகள்:**

பூஞ்சைகளை அழிக்க உதவும் வேதிப்பொருள்கள் பூஞ்சைக்கொல்லிகள் எனப்படும்.

எ.கா. தாமிர ஆக்ஸி குளோரைடு, போர்டாக்ஸ் கலவை (CuSO4 + Ca(OH)2)

**களைக்கொல்லிகள்:**

களைகளை (தேவையற்ற செடிகள்) அழிக்கப் பயன்படும் வேதிப்பொருள்கள் களைக்கொல்லிகள் எனப்படும்.

எ.கா.**2,4-D (2,4-டைகுளோரோ பீனாக்ஸி அசிட்டிக் அமிலம்**), **ப்ளுகுளேரலின், அட்ரசைன்**

**எலிக்கொல்லிகள்:**

எலிகள், சுண்டெலிகள், அணில்கள் போன்ற கொறிக்கும் விலங்குகளைக் கொல்லப் பயன்படும் வேதிப்பொருள்கள் எலிக்கொல்லிகள் எனப்படும்.

**எ.கா. துத்தநாக பாஸ்பேட், ஆர்சனிக்** , **தேலியம் சல்பேட், வெண்பாஸ்பரஸ்**




*NPK உரங்கள்: நைட்ரஜன் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் பல விகிதங்களில் கலந்து தயாரிக்கப்படுகிறது. பையின் மீது காணப்படும் 15–15–15 என்பது அதன் விகிதத்தைக் குறிப்பிடுகிறது.*